மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.162/2016</u>

2026ம் ஆண்டு ஏப்ரல் 10ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ருக்குமணி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>10.04.2026 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. புஷ்பராணி மற்றும் ஜெயக்குமார் ஆகியோர்களின் பூமி 2 ஏக்கர் 30 சென்ட் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி 2 ஏக்கர் 30 சென்ட் பூமிகள் பிஏபி வாய்க்கால் பாசனத்திற்கு கட்டுப்பட்டதா என்றால் அது எனக்கு தெரியாது. புஷ்பராணி மற்றும் ஜெயக்குமார் ஆகியோர்கள் பூமிக்கு மேல் புறம் அய்யாசாமி மனைவி பாப்பாத்தி மகன் குப்புசாமி ஆகியோர்கள் பாக பூமிகள் உள்ளது என்றால் சரிதான்.

2. தடத்திற்கு எந்த பக்கம் மேற்படியார்கள் பூமி உள்ளது என்றால் தென்புறத்தில் உள்ளது இந்த தாவாவில் சொல்லி உள்ள தடத்தில் மேற்படியார்களுக்கு உரிமை உள்ளதா என்றால் அனைவருக்கும் உரிமை உள்ளது. அதில் தான் மேற்படியார்கள் போய் வந்து கொண்டு உள்ளார்கள் என்றால் ஆமாம். பிரதிவாதிகள் பூமிக்கு கிழப்புறம் சுப்புராய கவுண்டர் என்பவரது பூமிகள் உள்ளது என்றால் ஆமாம். அவர்களுக்கு

தாவா தடத்தில் பாத்தியம் உள்ளது என்றால் அவர்களுக்கு பாத்தியம் இல்லை தாவா தடத்திற்கு எந்த பக்கத்தில் சுப்பராய கவுண்டர் பூமி உள்ளது என்றால் தென்புறத்தில் உள்ளது.

3. தாவா தடத்திற்கு வடபுறமாக 892/ 3பி மற்றும் 892/3சி ஆகிய பூமிகள் உள்ளது என்றால் ஆமாம். அந்த பூமிகள் சிவக்குமார் மற்றும் கோவிந்தசாமி ஆகியோர்களுக்கு பாத்தியமான பூமிகள் என்றால் சரிதான். 3 மற்றும் 4 பிரதிவாதிகள் பூமிக்கு தென்புறத்தில் நில வாய்க்கால் உள்ளது என்றால் இல்லை. புஷ்பராணி மற்றும் ஜெயக்குமார் யாருடைய பூமிகள் உள்ளது என்றால் வேறு நபர்கள் பூமிகள் உள்ளது பெயர் தெரியவில்லை.

4. 3 மற்றும் 4 பிரதிவாதிகள் பூமிக்கு தென்புறத்தில் நில வாய்க்கால் உள்ளது என்றும் அதை மறைத்து நான் அந்த இடத்தில் தடம் உள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் நாங்கள் தாவா தடத்தை பொறுத்து எங்களுக்கு பாத்தியம் உள்ளது என விளம்புகை பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தடத்தில் தட பாத்தியம் உள்ள அனைத்து நபர்களையும் நாங்கள் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 3, 4 பிரதிவாதிகள் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அவர்கள் பூமியில் மேல் புறமும், கிளபுறமும் கற்கள் நட்டு தென்வடலாக கம்பி வேலி போட்டுள்ளார்கள் என்றால் இல்லை.

5. 3, 4 பிரதிவாதிகள் அவர்களது தென்புறத்து அத்தில் கிழமேலாக கம்பி வேலி போட்டுள்ளார்கள் என்றால் இல்லை. பிரதிவாதிகள் தாவா தடத்தின் தென் புறத்தில் கல் நட்டு கம்பி வேலி அமைக்க முயற்சி

செய்தபோது அதை நாங்கள் ஆட்சேபனை செய்து இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். தடத்தில் கல் நட்டு கம்பி வேலி அமைக்க முயற்சி செய்தார்கள். எங்கள் ஆவணங்களிலும், பிரதிவாதிகள் ஆவணங்களிலும் தாவா தடத்தின் அகலம் 13 அடி என்றுதான் கண்டுள்ளது என்றால் இல்லை.

6. தாவா தடத்திற்கு மேல்புறம் உள்ள சாலை எங்கிருந்து எங்கு செல்கிறது என்றால் செம்மங்காலி பாளையத்திலிருந்து குறுக்கிலியம் பாளையம் வரை மேற்படி சாலை செல்கிறது. அந்த சாலையில் இருந்து கிழக்கே திரும்பி தான் தாவா தோட்டங்களுக்கு செல்ல வேண்டி உள்ளது என்றால் சரிதான். எங்கள் தோட்டம் தாவா தடத்திற்கு கிழப்புறமாக கிழக்கோட்டில் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

7. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது வழக்குரையுடன் உத்தேச மாதிரி வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியாது. எங்கள் பூமிக்கு தென்புறம் யாருடைய பூமி உள்ளது என்றால் பெயர் எனக்கு தெரியாது. எங்கள் பங்காளிகள் பூமி உள்ளது. எங்கள் பூமியை ஒட்டி வடபுறத்தில் அமரப்ப கவுண்டர் என்பவர் பூமி உள்ளது என்றால் ஆமாம். தாவா தடம்மானது 24 அடி அகலம் மற்றும் 28-1/4 அடி அகலத்தில் கிழ மேலாக செல்வதாக ரீசர்வையின் போது வருவாய் துறை ஆவணங்களில் தவறாக ஏற்பட்ட அளவுகளை அடிப்படையாகக் கொண்டு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

8. தாவா தடத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா தடத்தில் எத்தனை நபர்கள் பெயரில் பட்டா உள்ளது என்பது எனக்கு

தெரியாது என்றால் சரிதான். தாவா தடத்தை பொறுத்து நாங்கள் விளம்புகை பரிகாரம் எதுவும் கோராததாலும் தாவா தடத்தில் பாத்திய உரிமை உள்ள அனைத்து நபர்களையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினாலும் இந்த வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.04.10 18:25:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்